# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



17 Telle

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.மு. மதிமாறன், பி.இ.,

ந.க.எண். 5706/2019 மம 3 நாள்.03.02.2020

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி - கோம்பை மேற்கு கிராமம் - சர்வே எண். 886/6B ல் உள்ள 18950 சமீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சிக்கச்சியம்மன் கோவில் திட்டப் பகுதியில் உத்தேச தரைத் தளம் + மூன்று தளங்களுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1) செயல் அலுவலர், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி கடிதம், நக.எண். 40/2019, நாள். 11.04.2019 (இவ்வலுவலகத்தில் கடிதம் பெறப்பட்ட நாள்.11.12.2019)
2) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின்கடிதம்,ந.க.எண்.905/TPS/2019, நாள். 11.10.2019.
3) மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை, நக.எண். 28893/2018/ஆ4, நாள். 08.11.2018
4) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
5) அரசாணை எண்(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை, நாள். 4.2.2019.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2, நாள்.06.11.2019.
7) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.24.01.2020 (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது)
8) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம், நக.எண்.905/TPS/SAK/2019, நாள்.29.01.2020. (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது).

*****

Executive Engineer
TNSCB, Madurai Division

உத்தரவு :

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி-கோம்பை மேற்கு கிராமம், சர்வே எண். 886/6B -ல் உள்ள 18950 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு "A முதல் G வரை" என எல்லையிடப்பட்டு மனை ஒப்புதலும் அம்மனையில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சிக்கச்சியம்மன் கோவில் திட்டப் பகுதியில் உத்தேச தரைத் தளம் + மூன்று தளங்கள் கொண்ட Block A1 - A3 (3 Blocks) மற்றும் Block B1 - B6 (6 Blocks) ஆகிய 9Blocks -ல் உள்ள மொத்தம் 480 குடியிருப்பு கட்டிடங்களின் பரப்பளவு விபரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

Area Details

Area of the Site - 18950.00 ச.மீ

OSR - 1915.31 ச.மீ

| S.No | Block Name | Ground Floor Area (Sq.m) | First Floor Area (Sq.m) | Second Floor Area (Sq.m) | Third Floor (Sq.m) | Total Area (Sq.m) | No. of Tenements |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Block (A1 - A3) | 301.81 x 3 = 905.43 | 301.81 x 3 = 905.43 | 301.81 x 3 = 905.43 | 301.81 x 3 = 905.43 | 3621.72 | 32 x 3 = 96 units |
| 2 | Block (B1 - B6) | 604.12 x 6 = 3624.72 | 604.12 x 6 = 3624.72 | 604.12 x 6 = 3624.72 | 604.12 x 6 = 3624.72 | 14498.88 | 64 x 6 = 384 units |
| | Total Area | 4530.15 | 4530.15 | 4530.15 | 4530.15 | 18120.60 | 480 units |

பார்வை 6-ல் கண்ட சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வரைபடங்கள் TNCDBR - 2019-ன்படி விதிகளை நிறைவு செய்வதால் மேற்கண்டுள்ளவாறு பரப்புகளுடன் கூடிய உத்தேச குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.து.இ.(மம).எண்.06/2020 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் / நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

2. As per G.O. (MS) No.18, MA & WS Department date:04.02.2019 "OSR portion should be earmarked and kept open to sky without any construction with the condition that the open space reservation should be utilized only as a park.

3. However the space may be maintain by the owner concerned subject to the supervision and monitoring of the concern Local body.

4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

Executive Engineer
TNSCB, Madurai Division

5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

6. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Sewage Treatment Plant, Tamil Nadu combined Development and Building Rules 2019-ன்படி உத்தேசிக்கப்பட வேண்டும்.

7. அரசாணை எண். 17 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள். 05.02.2016-ன்படி உத்தேச குடியிருப்புக் கட்டிடத்தின் Terrace தளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையாமல் சோலார் எனர்ஜி சிஸ்டம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

8. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u> :

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள 1915.31 ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

Executive Engineer
TNSCB, Madurai Division

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகன ங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.
14. "The Tamil Nadu Government in G.O.MS.No.112, Housing & Urban Development Department, dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act - 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or Building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with Real Estate Regulartory Authority".

பார்வை (4) மற்றும் (5) -ல் கண்ட அரசாணைகளின்படி பார்வை (8) ல் கண்ட கடிதம் மூலம் மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் விளம்பரப் பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணங்கள் ஆகியவை முழுமையாக பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முத்திரையிட்டு ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டு வரைபடத்தொகுப்புகள் இறுதி ஒப்புதலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

கட்டிட வரைபடத்திற்கு இவ்வுத்தரவில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கிட செயல் அலுவலர், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**Executive Engineer**
**TNSCB, Madurai Division**

14

25

கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் தொடர்பாக மனுதாரர் செயல் அலுவலர், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்.

**இணைப்பு**
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
இரண்டு தொகுப்பு.

**பெறுநர்**
செயல் அலுவலர்,
கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

**நகல்**

1. நிர்வாகப் பொறியாளர்,
   தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம்,
   மதுரை கோட்டம்,
   எண்.169, கே.கே.நகர் பிரதான சாலை,
   கே.கே.நகர்,
   மதுரை - 625 020.

2. தொழில்நுட்ப வைப்பறை
   (வரைபடங்கள் மற்றும் கடித நகல்) - 1

Executive Engineer
TNSCB, Madurai Division

**தேனி மாவட்டம் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலரது நடவடிக்கைகள்**

**ஆணையிடுபவர் : திருமதி. பா. ஜெயலட்சுமி**

க.உ.எண் : 53/2019–20 நாள் : 24.03.2020

பொருள் : கட்டிட உரிமம் – தேனி மாவட்டம் – உத்தமபாளையம் தாலுகா – கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி – கோம்பை மேற்கு கிராமம், – சர்வே எண். 886/6Bல் உள்ள 18950 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகுபாரத பிரதமரின் PMAY - HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சிக்கச்சியம்மன் கோவில் திட்டப் பகுதியில் உத்தேச தரைத்தளம் + மூன்றுமேல் தளங்களுடன் கூடிய 480 குடியிருப்புகள் கட்ட– கட்டிட அனுமதி வழங்க – உத்திரவிடுதல் – தொடர்பாக

பார்வை :
1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியம், மதுரை, ந.க.எண்.905/TPS/2019 நாள். 11.10.2019
2. மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 28893/2018/ஆ4 நாள். 08.11.2018
3. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004
4. அரசாணை எண்(நிலை) எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை நாள். 04.02.2019
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/பிஏ2 நாள். 06.11.2019
6. இவ்வலுவலக கடிதம் இதே நாள் 24.01.2020 (நன்னிலை வரி, விளம்பர பலகை கட்டணம் மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது
7. நிர்வாக பொறியாளர் த. கு. மா. வாரியம் , மதுரை கோட்டம் அவர்களின் ந.க.எண்.905/TPS/SAK/MDU / 2019 நாள். 29.01.2020 (நன்னிலைவரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது) \

**********

உத்திரவு:

கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி வார்டு எண். 8 சிக்கச்சியம்மன் கோவில் திட்டப் பகுதியில் சர்வே எண். 886/6Bல் உள்ள 18950 ச.மீ பரப்பளவுள்ள மனையிடத்தில்கட்டிடம் கட்டுவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த கட்டிட உரிமம் 24.03.2020 முதல் 23.03.2025 வரை செல்லத்தக்கதாகும். '

**நிபந்தனைகள்**

1. உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar water Heating System அமைக்கப்பட வேண்டும்

2. இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்

3. மனையில் காட்டப்பட்டுள்ள 1915.13 ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 11.10.2002ன்படி கட்டித்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் உபயோகிப்போர் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல்நிலைத்தொட்டி வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும் .

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும் 9. அரசாணை எண். 341 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ரு.நி.1 ) துறை, நாள். 03.11.0ன் படி செப்டிக் டேங்க்கில் "U Trap" அமைத்தல் வேண்டும்.

9. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FIY ASH BRICKS மற்றும் Meterials பயன்படுத்தப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும். .

11. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (water act)–ன் படி மேற்படி வாரிய இணக்கம் ( consent)பெறப்பட வேண்டும்.

12. கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்.

13. இந்த உத்திரவு தமிழ்நாடு முனிசிபல் சட்டப்பிரிவுகளுக்கு உட்பட்டதாகும்.

14. பக்கத்து இடங்களில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.

15. அனுமதிக்கப்பட்ட வரைபடத்தினையும், உத்திரவினையும் எந்த நேரத்திலும் வேறு பரிசீலனைக்கும் வரும் பொழுது காண்பிக்கத்தக்கதாய் கட்டிடத்தின் பொது இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

16. கட்டிடத்தில் யாதொரு மாற்றமும் செய்யும் முன்பே பேரூராட்சியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

17. பஞ்சாயத்து கட்டிட விதிகளுக்கும், முனிசிபல் கட்டிட விதிகளுக்கும் இந்த அனுமதி உத்திரவு செயல்படத் தகுதியானதென்று கூற முடியாது.

18. புதிய கட்டுமான இடம் மற்றவருக்கு ஆட்சேபகரமானதாக இருக்கக்கூடாது.

29

19. கழிவு நீர் செல்ல பாதுகாப்பான சாக்கடை சொந்த செலவில் சொந்த இடத்தில் கட்டப்பட வேண்டும்.
20. கழிப்பிடம் கட்ட வேண்டும்.
21. புதுக்கட்டிடத்தில் குடிபுகுமுன் இப்பேரூராட்சியின் மேற்படி இடத்தில் குடியிருக்கத் தகுதியானதென்று சான்றிதழ் பெற்று பின்னரே குடிபுகு வேண்டும்.
22. சமையல் அறையில் புகைபோக்கி வைக்க வேண்டும்.
23. கட்டிடம் கட்டுமிடத்தில் ஏதும் வில்லங்கம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பு ஏற்கவேண்டும்.இப்பேரூராட்சி பொறுப்பில் இந்த அனுமதியை ஒரு ஆதாரமாக கருதக்கூடாது.
24. இந்த வரைபடத்தில் கண்ட கட்டிடம் கட்டப்படும் இடம் பின்னாளில் கட்டிடத்துக்கு சொந்தக்காரருக்கு பாத்தியமில்லை என்று தெரிந்தாலோ அல்லது புறம்போக்கு இடத்திலோ அல்லது வேறு அரசு சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் இடத்தில் கட்டப்பட்டதாக தெரிந்தாலோ கட்டப்பட்ட கட்டிடம் அகற்றுவதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இந்த வரைபட அனுமதி ரத்து செய்யப்படும்.
25. இத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதலாக கட்டிடம் கட்டக்கூடாது.
26. படிக்கட்டுகள் உமது சொந்த இடத்தில் போட்டுக்கொள்ள வேண்டும்.
27. தெருவோராகமாக வீட்டுக்கு முன்பாக 4 அடி அகலமுள்ள காலி இடம் இருக்க வேண்டும்.
28. தெருவில் கட்டிட சாமான்கள் போடுவதாக இருந்தால் தனியாக கட்டணம் செலுத்தி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
29. கட்டிடத்தில் பேரூராட்சி முன் அனுமதியின்றி எந்தவிதமான மின்சாரம் அல்லது ஆயில் மோட்டார் அமைத்து தொழில் செய்யலாகாது.
30. கழிவு நீரைக் கடத்த செப்டிக் டாங்க் ஒன்று அமைக்க வேண்டும்.
31. மேலும் குறைந்தது இரண்டுஇப்பேரூராட்சியில் பிளான் அங்கீகாரம் பெற்ற அனுமதி எண், நாள் குறித்த விபரத்திற்கு கட்டிடம் கட்டப்படும் இடத்தில் போர்டு வைக்க வேண்டும்.
32. கட்டிடம் கட்டி முடித்து வரி நிர்ணயம் செய்யப்படும் பொழுது மழைநீர் சேகரிப்புதொட்டி புகைப்படம் சமர்பிக்கப்பட வேண்டும்

24/3/2020

**செயல் அலுவலர்**
**கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி**
**தேனி மாவட்டம்**

24.3.2020

24.3.2020

24.3.2020

24.3.2020

பெறுநர்
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியம்,
மதுரைக்கோட்டம்,
கே.கே.நகர் பிரதானசாலை, மதுரை –20



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate